# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,147 — 1960 ජූනි 17 වැනි සිකුරාදා — 17.6.1960

12,147 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 145 | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 146 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 146 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## பதவிகள்—வெற்றிடம்

### கமத்தொழிற் சேவைப் பகுதி

#### கிராமப் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் பதவி

கமத்தொழிற் சேவைப்பகுதியில் கிராமப் பயிர்ச்செய்கை உத்தியோகத் தராகப் பயிலுவோர் பதவிகளுக்கு மனுக்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் மாதிரி மனுப்பத்திரத்தைப்போலுள்ள பத்திரத்தில் மனுக் கள் நிரப்பப்பட்டு கமத்தொழிற் சேவை ஆணையாளர், இல. 42 எடின் பரோ கிறசென்ற், கொழும்பு 7, என்ற விலாசத்திற்கு 1960 ம் ஆண்டு யூலை மாதம் 8 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக் கக் கூடியதாக அனுப்பப்படவேண்டும்.

2. எல்லா மனுக்களும் கிடைக்கப்பட்டதாக அறிவிக்கப்படும். மனுக் கள் அனுப்பப்பட்ட ஏழு நாட்களுக்கிடையில் மனுக்கள் கிடைக்கப்பட்டதாக அறிவித்தல் வராவிடில், உடனேயே கமத்தொழிற் சேவை ஆணையா ளருக்குத் தெரியப்படுத்தல் வேண்டும். இவ்வேற்பாட்டிற்கு அமைய நடக்கத்தவறும் மனுதாரின் எவ்வித கோரிக்கையும் பின்னர் கருதப் படமாட்டாது.

3. **தேவையான தகைமைகள் :—**

ஒவ்வொருவரும் கீழ்க்காணும் பிரமாணங்கட்கு அமையத் திருப்தி கரமான சான்றுகள் அளிக்கவேண்டும்.

(அ) 1960 ம் ஆண்டு யூன் மாதம் முதலாந் திகதியன்று பதினெட்டு (18) வயதிற்குக் குறையாதவராயும், இருபத்தைந்து (25) வயதிற்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும் ;

(ஆ) தூயகணிதத்திலும், கீழ்வரும் பாடங்களில் ஏதாவதொன்றி லும் திறமையான சித்தி பெற்ற சிரேட்ட தராதரப் பத்திரம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(1) பிரயோக கணிதம் ;
(2) பௌதீகம் ;
(3) ரசாயனம் ;
(4) தாவர இயல் ;
(5) பூமிசாத்திரம் ;

சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது சாதாரண பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் குறித்த பாடங்கள் திறமையான சித்தி பெற்றிருக்கவேண்டும்.

4. **சேவை நிபந்தனைகள் :—**

(அ) உடன்படிக்கை : பயிலுவோர் ஒவ்வொருவரும் தெரிவு செய்யப் பட்டவுடன், முதலாம், இரண்டாம், வருடங்களில் அளிக்கப் படும் பயிற்சிகளில் அவர் ஊக்கமுடனும் நேர்மை யுட னும் பயின்று பயிற்சி முடிவடைந்ததும் கிராமப்பயிர்ச் செய்கை உத்தியோகத்தராக அரசாங்கத்தில் நான்கு வருடத் திற்குக் குறையாமல் திருப்திகரமாகக் கடமைபார்ப்பதாக ஓர் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். உடன்படிக்கை யின் நியதிகளை வினையப்படுத்துவதற்குப் பெற்றோர் அல்லது பாதுகாவலர், வேறிரண்டு பிணைகளுடன் ரூபா 3,000 ற்கு ஓர் நிபந்தனை எழுதுதல் வேண்டும் ;

(ஆ) 1960 ம் ஆண்டு யூலை மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாகி இரண்டு வருடங்கட்குப் பயிற்சிகள் கீழ்வருமாறு அளிக்கப்படும் ;

(1) 1960 ம் ஆண்டு யூலை மாதம் நடுப்பகுதியில் தொடங்கி ஒருவருடத்திற்கு நீர்ப்பாசனத்தைப்பற்றிய பாடம் நுண் கலைக் கல்லூரியில் நடைபெறும் ;

(2) நீர்ப்பாசனத்தைப்பற்றி ஆறுமாச காலம் செய்கை முறைப் பயிற்சி (வெளியில்) அளிக்கப்படும் ;

(3) நான்கு மாசத்திற்கு விவசாயம் பற்றியன விவசாயப் பகுதியில் நடைபெறும் ;

(4) நிர்வாகம் பற்றியன இரண்டு மாச காலம் பயில்விக்கப் படும்.

(இ) கிராமப்பயிர்ச்செய்கை உத்தியோகத்தராக நியமனம் :

மேலே சொல்லப்பட்ட பயிற்சிகள் திருப்திகரமாக முடிவடைந் ததும், இடங்கள் காலியாகும்போது பயிற்றப்பட்டவர்கள் கிராமப் பயிர்ச்செய்கை உத்தியோகத்தராக நியமனம் பெறத்தகுதி யுடையவராவர். இவர்கள் இலங்கையின் எப்பாகத்திற்கும் மாற்றப்படலாம்.

5. **சம்பளம் :—**

(1) பயிலுபவர் தெரிவு செய்யப்பட்டதும், 4 (ஆ) ல் சொல்லப்பட்ட இரண்டுவருட பயிற்சிக்காலத்தில், வருடமொன்றிக்கு ரூபா 660 ம் அரசாங்க விதிப்படி வாழ்க்கைச் செலவுப்படியும் சம்பளம் பெறுவர்.

(2) கிராமப் பயிர்ச்செய்கை உத்தியோகத்தராய் நியமனம் பெற்றதும் வருடமொன்றிற்கு ரூபா 1,260—120—3,300 பெறுவர்.

(திறமைகாண் தடை ரூபா 2,340 ற்கும் ரூபா 2,940 ற்கும் இடையில் நடைபெறும்.)

6. பதவிகள் நிரந்தரமும், இளைப்பாற்று வேதனமுமுடையவை யாகும்.

7. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் அனுப்பும் மனுக்கள் நடைமுறைக் கைநூலில் 109 ம் பிரிவிலுள்ள நியதிப்படி அவர்களின் பகுதித் தலைவர்கட்கூடாக அனுப்பப்படல் வேண்டும்.

8. அரசாங்க சேவை நியமனங்களுக்குள்ள பொது விதிகளை அறி வதற்கு அரசாங்க வர்த்தமானியின் 1 ம் பாகம் 2 ம் பிரிவின் ஆரம் பத்திற் பிரசுரிக்கப்பட்டுள்ளவைகளைக் கவனிக்கவும்.

9. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட பரீட்சார்த்திகள் கீழ்க் காணப்படும் மூலப் பிரதிகளைக் காண்பிக்கவேண்டும்.

(1) பிறப்புச் சாட்சிப் பத்திரம் ;
(2) கல்வித் தகைமைப் பத்திரம் ;
(3) அண்மையிற் பெறப்பட்ட இரண்டு நலச்சான்றுப் பத்திரங்கள்

மனுப்பத்திர வடிவம்

1. முழுப்பெயர் : ————.
2. நிரந்தர விலாசம் : ————.
3. வயசும் பிறந்த திகதியும் : ————.
4. கல்வித் தகைமையும், சித்தியடைந்த பாடங்களின் விபரங்களும், பரீட்சை நடந்த திகதியும் : ————.
5. தற்போதைய தொழில் : ————. (இருந்தால்)
6. சான்றிதழ் வழங்கியவர்களின் பெயரும், விலாசமும் ;

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கூட்டுறவுத் துறை

**கூட்டுறவுச் சங்கங்களின் மனேஜராக அல்லது காரியதரிசியாக நியமனம் பெறவிரும்புவோருக்குரிய பயிற்சி**

மேற்படி பயிற்சி பெறவிரும்புவோர் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 23 ம் திகதிக்குமுன் " தலைவர் கூட்டுறவுக் கல்லூரி, பொல்கொலை " என்ற விலாசத்திற்குத் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பவேண்டும். விண்ணப்பப் பத்திரங்களைக் கூட்டுறவுக் கல்லூரித் தலைவரிடமிருந்து அல்லது விண்ணப்பம் செய்பவர் வசிக்கும் பகுதிக்குரிய உதவிக் கூட்டுறவு ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**பயிற்சி விபரங்கள்**

**காலம்.**—20.9.60—20.12.60.

**பாடங்கள்.**—கூட்டுறவு, கணக்குப்பதிவும் கணக்கியலும், செயலாளர் தொழிற் பயிற்சி, விற்பனவு முறையும் நிருவாகமும்.

**பயிற்சி வகுப்பில் சேர்வதற்குரிய தராதரம்.**—விண்ணப்பம் செய்வோர் :—

(1) 23.7.60 ல் 18 வயதுக்கு மேற்பட்டவராயும் 40 வயதுக்குட்பட்டவராயுமிருத்தல் வேண்டும் ;

(2) சிங்கள அல்லது தமிழ் அல்லது ஆங்கில கனிஷ்ட பாடசாலைத் தராதரம் பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது அடுத்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு பதிவு பெற்ற கூட்டுறவுச் சங்கத்தில் மனேஜராகவோ, காரியதரிசியாகவோ, எண்ணலாளராகவோ, கணக்குப் பதிவாளராகவோ கடமையாற்றி மாதச் சம்பளம் பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது கூட்டுறவுக் கல்லூரி 1950 ம் ஆண்டு தொடங்கி 1957 ம் ஆண்டு வரை நடத்திய கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது கூட்டுறவுத்துறையின் விஸ்தரிப்புப் பகுதி வார இறுதிப் பணியாளர் வகுப்பின் முடிவில் நடத்திய பரீட்சைகளில் கூட்டுறவிலும், கணக்கியலிலும் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**பயிற்சி நிலையங்கள்.**—(1) பொல்கொலை, நீர்கொழும்பு, காலி, குருநாகல், இரத்தினபுரி, பண்டாரவளை, அனுராதபுரம், மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவுக் கல்வி நிலையங்கள். (ஒவ்வொரு நிலையத்திலும் பயிற்சி பெறக் கூடியவரின் ஆகக் கூடிய தொகை 30. விண்ணப்பம் செய்வோர் நிலையங்கள் உள்ள மாகாணங்களில் வசிப்பவராய் அல்லது வேலை செய்பவராய் இருத்தல் வேண்டும். இவற்றில் தங்கும் வசதி இல்லையாது. மட்டக்களப்பு நிலையத்தில் தமிழிலும் ஏனைய நிலையங்களில் சிங்களத்திலும் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படும்.)

(2) யாழ்ப்பாணக் கூட்டுறவுக் கல்லூரியில், யாழ்ப்பாணக் கூட்டுறவு மேற்பார்வைச் சபையாலும், கொழும்பிலும், சிலாபத்திலும், கேகாலையிலும், மாத்தறையிலும், களுத்துறையிலும், மன்னாரிலும், இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்தாலும் இவ்வகுப்புக்கள் நடத்தப்படும். இவற்றில் சேர விரும்புவோர் பத்திரிகையில் அல்லது வேறு முறையில் அறிவித்தல் கொடுக்கப்படும் பிரகாரம் விண்ணப்பம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தெரிவு.**—ஒவ்வொரு நிலையத்திற்கும் பயிற்சியாளரைத் தெரிந்தெடுப்பதற்கு எழுத்துப் பரீட்சை வைக்கப்படும். ஆகவே விண்ணப்பங்களைக் கவனமாக எழுதி அனுப்ப வேண்டும். தகுதியுள்ளவர் மட்டும் விண்ணப்பம் செய்ய வேண்டியது அவசியம். விண்ணப்பங்களுடன் தெரிவுப் பரீட்சைக் கட்டணமாக ரூபா 2 போஸ்ரல் ஆடர்மூலம் " இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனம், கொழும்பு " என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். பிரயாணச் செலவு கொடுக்கப்பட மாட்டாது. தகுதியின்றி விண்ணப்பம் செய்வோருக்குத் தெரிவுப் பரீட்சைக் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

**கட்டணம்.**—பயிற்சி இலவசம். பயிற்சியின் முடிவில் நடைபெறும் பரீட்சையை எடுப்பவரிடமிருந்து ரூபா 2.50 அறவிடப்படும்.

**பரீட்சையும் தராதரப் பத்திரமும்.**—பயிற்சியின் முடிவில் நடைபெறும் பரீட்சையிற் தேறுபவர்கட்கு " கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் " வழங்கப்படும்.

**பயிற்சியின் பயன்.**—இப்பத்திரம் பெறும் யாவருக்கும், வேலை கிடைக்குமென்று கூட்டுறவுத்துறை உத்தரவாதம் அளிக்கவில்லை.

கூட்டுறவின் ஆக்க ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும்.

கூட்டுறவுத்துறை,
கொழும்பு,
1960 ம் ஞு ஜூன் மீ 10 ந உ.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## மதுவரிப் பகுதி

1960 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் ஒரு வருட காலத்திற்கு கீழ்க்காணும் ஒன்று அல்லது கூடுதலான இடங்களிடையே சாராயமும் மற்றும் பொருட்களும் கொண்டு செல்வதற்கு கேள்விப்பத்திரங்களை 1960 ம் ஆண்டு ஆடி மாதம் 13 ந் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிவரை மதுவரி அதிகாரி ஏற்றுக் கொள்ளுவார்.

(i) கண்டியிலுள்ள சாராயக் குதத்திற்கும் புகையிரதப்பகுதி பண்டகசாலைக்கும்,

(ii) வதுளையிலுள்ள சாராயக் குதத்திற்கும் புகையிரதப் பண்டகசாலைக்கும்,

(iii) (அ) யாழ்ப்பாணத்திலுள்ள சாராயக்குதத்திற்கும் சுங்கப் பகுதி புகையிரத இடைவழித்தரிப்பிடத்திற்கும்,

(ஆ) யாழ்ப்பாணத்திலுள்ள சாராயக்குதத்திற்கும் புகையிரதப்பகுதி பண்டகசாலைக்கும்.

2. மதுவரி அதிகாரியிடமிருந்து கேட்டுப்பெற்றுக் கொள்ளக்கூடிய கேள்விப்பத்திரங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும். இவ்விடயத்தையிட்ட எல்லா விபரங்களையும் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ரி. பி. வடுகொடபிற்றியா,
மதுவரி அதிகாரி.

மதுவரி அதிகாரியின் கந்தோர்,
சவோய் கட்டடம்,
வெள்ளவத்தை,
கொழும்பு,
1960 ம் ஞு ஆனி மீ 2 ந உ.

## மதுவரிப் பகுதி

**சாராயமும் மற்றும் பொருட்களும் கொண்டு செல்வதற்கு கேள்விப்பத்திரங்கள்—களுத்துறைக் குதங்கள்**

1960 ம் ஆண்டு, ஐப்பசி மாதம் 1 ந் திகதி தொடக்கம் ஒரு வருட காலத்திற்கு களுத்துறை மாவட்டத்திலுள்ள சாராயக்குதங்களுக்கும் புகையிரதப்பகுதி பண்டகசாலைகளுக்குமிடையேயும் கொழும்பு மாவட்டத்தில் மொரட்டுவையிலுள்ள சாராயக்குதங்களுக்கும் புகையிரதப் பகுதிப் பண்டகசாலைக்குமிடையேயும், சாராயமும் மற்றும் பொருட்களும் கொண்டு செல்வதற்குக் கேள்விப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஆடி மாதம் 6 ந் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணி வரை, தொழில், கைத்தொழில், மீன்பிடி அமைச்சுப் பகுதியின் கேள்விப் பத்திர சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மதுவரி அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய கேள்விப் பத்திரங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும். இவ்விஷயத்தையிட்ட எல்லா விபரங்களும் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ரி. பி. வடுகொடபிற்றியா,
மதுவரி அதிகாரி.

மதுவரி அதிகாரியின் கந்தோர்,
சவோய் கட்டடம்,
வெள்ளவத்தை,
கொழும்பு,
1960 ம் ஞு ஆனி மீ 2 ந உ.

## நீர்ப்பாசனப் பகுதி

மத்திய பகுதி பிரதான நீர்ப்பாசனப் பொறியியலாளர், (அ) ஹஸலக சிறு குளத்தின் உள் வெளி மதவுகளுக்கு இரும்பினுல் இணைக்கப்பட்ட கதவுகளும் அவைகளைத் திறக்கும் இயந்திர இணக்கங்களும் (ஆ) ஹஸலக சிறு குளத்தின் வானுக்கு இரும்புக் கதவுகளும் அவைகளைத் திறக்கும் இயந்திர இணக்கங்களும் கொடுப்பதற்கு, இவ்விலாகாவில் முறையே ரூபா 20,000 ; ரூபா 10,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 13 ம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணி வரைக்கும், கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்வார்.

2. வேரகன் தொட்டையிலுள்ள ஹஸலக உபபகுதி நீர்ப்பாசன பொறியியலாளரின் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய பத்திரங்களைப் பிரதியுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவரின் காரியாலயத்தில் படங்களைப் பரிசோதித்து வேண்டிய விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

3. வேரகன் தொட்டையிலுள்ள ஹஸலக உபபகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயத்தில் அல்லது கண்டி கச்சேரியில் கேள்விப் பத்திரப் பிணைப்பணமாக 25 ரூபாய் கட்டிப் பற்றுச் சீட்டு பெற்றவரும் தகுதி வாய்ந்தவரென அத்தாட்சிப்படுத்தும் ஒப்பந்தக்காரர்களுக்கு மாத்திரமே 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 20 ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 11 ம் திகதி வரைக்கும் இதற்குரிய கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படும்.

4. ஏற்கனவே அரசாங்கத்தின்கீழ் வேலை செய்யும் ஒப்பந்தக்காரர்கள் தங்களது வேலை திருப்திகரமாய் முன்னேறுகிறது என்று அவ்வேலைக்குப் பொறுப்பான மேலதிகாரியிடமிருந்து பெற்ற நட்சாட்சிப் பத்திரத்தை கேள்விப் பத்திரத்திற்கு விண்ணப்பம் செய்யும் பொழுது சமர்ப்பிக்க வேண்டும்.

5. கண்டியில் பழைய கச்சேரிக் கட்டிடத்திலுள்ள மத்திய பகுதி பிரதான நீர்ப்பாசன இலாகா காரியாலயத்தில் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 13 ம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு, மத்திய பகுதி பிரதான நீர்ப்பாசனப் பொறியியலாளர் கேள்விப் பத்திரங்களை திறந்து பார்வையிடுவார். அச்சமயம் சமூகமளிக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கு அனுமதி அளிக்கப்படும்.

6. கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் கடைசித் திகதியிலிருந்து 3 வாரங்கள் ஒப்பந்தக்காரர்கள் தங்கள் கேள்விகளை பகிரங்கமாய் வைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றனர்.

7. ஏனைய விபரங்களை வேரகன்தொட்டையிலுள்ள ஹஸலக உப பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
ஹஸலக உபபகுதி.

ஹஸலக உபபகுதி நீரப்பாசனக் காரியாலயம்,
வேரகன்தொட்டை,
1960 ம் ஞுப ஜூன் மீ 7 ந் உ.

---

## நீர்ப்பாசனப் பகுதி

வடபகுதிப் பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியரால் மன்னர் பகுதியிலுள்ள தம்பனைக் குளத்தைச் சீர்திருத்தி அமைப்பதற்குக் கேள்விப் பத்திரங்கள் 5–7–60 காலை 9.30 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேற்காட்டிய வேலையைச் செய்வதற்கு நீர்ப்பாசன இலாகாவில் ரூபா. 40,000 ம் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் காறரிடமிருந்தே கேள்விப்பத்திரங்கள் வேண்டப்படும். கேள்விப்பத்திரத்துக்குரிய பணம் ரூபா 50. இப்பணத்தைக் கச்சேரியில் அல்லது நீர்ப்பாசன இஞ்சினியர் அலுவலகத்தில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்ற ஒப்பந்தக்காறருக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

அத்துடன் வேலையைப்பற்றிய திட்டங்களையும், மாதிரிப்படங்களையும் நீர்ப்பாசன இஞ்சினியர் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

நீர்ப்பாசன இஞ்சினியர்,
மன்னர் மாவட்டம்.

நீர்ப்பாசன அலுவலகம்,
முருங்கன்,
1960 ம் ஞுப ஜூன் மீ 9 ந் உ.

---

## நீர்ப்பாசனப் பகுதி

வடமத்திய பகுதி நீர்ப்பாசன மாவட்ட இஞ்சினியரால் பின்வரும் சேவைக்கு விண்ணப்பப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு யூன் மாதம் 22 ம் தேதி காலை 9.30 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

| சேவையின் விபரம் | பதிவுத் தொகை | கட்டுப்பணம் |
|---|---|---|
| உஸ்கலை சியாம்பலகமுவ, வலது பாகப் பெரும் வாய்க்காலில் மேற் கடவை அமைத்தல் | ரூபா 50,000 | ரூபா 50 |

2. ரூ. 50,000 க்கும் அதற்கு மேலும் நீர்ப்பாசன பகுதியில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மட்டும் விண்ணப்பஞ் செய்யலாம்.

3. விண்ணப்பப் பத்திரங்கள் இராசாங்கனை உபபகுதி இஞ்சினியரிடம் பெற்றுக் கொண்ட தாள்களில் இரு பிரதி செய்யப்பட வேண்டும். மேற்படி இஞ்சினியரிடம் மற்றும் விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

4. விண்ணப்பப் பத்திரங்கள் 1960 ம் ஆண்டு யூன் மாதம் 17 ம் தேதி தொடக்கம் 21 ம் தேதி வரை காரியாலய நேரங்களில் மேற்படி இஞ்சினியரின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ரீ. ஆர். டி. சில்வா,
நீர்ப்பாசன இஞ்சினியர்,
இராசங்கனை உப பகுதி.

நீர்ப்பாசனக்காரியாலயம்,
தம்புத்தகம,
1960 ம் ஞுப ஜூன் மீ 1 ந் உ.

---

## நீர்ப்பாசனப் பகுதி

மொனருகலை உப-பகுதியிலுள்ள லுணுகலையோத வெவத் திட்டத்தை அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்களை, 1960 ம் ஆண்டு ஜூலை மாசம் 6 ம் தேதி காலை 10 மணி வரைக்கும் பண்டாரவளையிலுள்ள பெரும்பாக பொறியியலாளர் ஏற்றுக் கொள்வார்.

கேள்விப்பத்திரங்கள் மொனருகலை உப-கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம். உப-கந்தோரில் பிளான்கள் பார்ப்பதற்கும், வேறு விபரங்கள் அறிவதற்கும் வசதி அளிக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் சீல் செய்து இரு பிரதிகளில் அனுப்பப்படவேண்டும்.

ஒரு கச்சேரியிலேனும் அல்லது மொனருகலை உப-கந்தோரிலேனும் ரூபா 25 கட்டுப்பணமாய்க் கட்டப்பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து 5.7.60 வரைக்கும் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பக்காரர்கள் நீர்ப்பாசன இலாகாவில் ரூபா 25,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கோ பதிவு செய்தோராக இருக்க வேண்டும். கையிருப்பு வேலைகள் இருப்பின் அவ்வேலைகளைப்பற்றிய நற்சாட்சிப் பத்திரங்களோடு மனுச்செய்ய வேண்டும்.

ஓ. எஸ். சந்திரறட்ன,
உப பகுதி உத்தியோகத்தர்,
மொனருகலை.

நீர்ப்பாசனக் கந்தோர்,
மொனருகலை,
1960 ம் ஞுப மே மீ 30 ந் உ.

---

## கமத்தொழிற் சேவைப் பகுதி

### எள்ளு விற்பனை செய்தல்

1959 ம் ஆண்டு இப்பகுதியால் சேர்க்கப்பட்ட 250 அந்தர் தொகையான எள்ளை விற்பனை செய்யும் பொருட்டு, கமத் தொழிற் சேவை அதிகாரி, இவற்றை வாங்க விரும்பும் வியாபாரிகளிடமிருந்து விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுவார். விண்ணப்பப் பத்திரங்கள் 30–6–60 திகதி பின்நேரம் 3 மணிக்கு முன்பு இப்பகுதியால் ஏற்கப்படும். கீழ் தரப்பட்டிருக்கும் தரக்குறிப்புகளுடன் இருக்கும் எள்ளு விற்பனை செய்யப்படும். இவற்றை வாங்க விரும்புவோர் கொழும்பிலிருக்கும் உத்தரவாத விலைத்திட்ட பண்டகசாலையில், தலைமை அதிகாரிக்கு விண்ணப்பஞ் செய்து பொருட்களை பார்வையிடலாம். தெலிபோன் இலக்கம் 5216.

2. **எள்ளின் குறிப்புகள்.**—இலங்கை எள்ளு, கறுப்பு நிறம், வெள்ளை சிவப்பு நிற எள்ளுகள் கலந்தவை, 3 சத வீத அசுத்தக் கலப்புடையது. 47 சதவீத எண்ணைச் சற்றுள்ளது. பழைய சாக்கில் அடைக்கப்பட்டுள்ளது.

3. விண்ணப்பஞ் செய்யும் காகித மூடியின் இடது பக்கத்தில், " எள்ளுத் ரெண்டர் " என எழுதி, 42 எடின்பரோ கிறெசன்ட், கொழும்பு 7, என்னும் இப் பகுதியிலிருக்கும் தெண்டர் பெட்டியில் அல்லது கமத்தொழிற் சேவை அதிகாரி, தபாற் பெட்டி இலக்கம் 537, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

4. விண்ணப்பஞ் செய்வோர் தங்களால் குறிப்பிட்ட விலைக்கு எவ்வளவு தொகையான எள்ளை வாங்கமுடியும் என்பதையும் விண்ணப்பப் பத்திரத்தில் தெரிவிக்க வேண்டும்.

5. வேறு விபரங்கள் வேண்டுமாயின், கமத்தொழிற் சேவை அதிகாரி, தபாற் பெட்டி 579, கொழும்பு 10 என்ற விலாசத்திற்கு விண்ணப்பித்து அறிந்து கொள்ளலாம்.

க. சித்தம்பலம்,
கமத்தொழிற் சேவை அதிகாரிக்காக.

கமத்தொழிற் சேவைப் பகுதி,
336, டீன்ஸ் ரோட்,
கொழும்பு, 10,
1960 ம் ஞூ ஜூன் மீ 10 ந் வ.

---

## இலங்கை போக்குவரத்துச்சபை
## விற்பனவு அறிவித்தல்

கொழும்பு-5, கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை, கேள்விப்பத்திரச் சபைத் தலைவரால் 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 1 ம் திகதி மு. ப. 10.00 மணிவரை வெரஹெரை இ. போ. ச. வேலைத்தல வளவுக்குள் இருக்கும் பின்வரும் பழைய ஸ்டுடிபேக்கர் பஸ்களை கொள்வனவு செய்து எடுத்துச்செல்லுவதற்காக, முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

CL 8132—சிலிண்டர்த் தலை இல்லாமல்.

CL 833—என்ஜின், ரேடியேட்டர், கியர் பெட்டி, ஓட்டும் தண்டு, பின் அக்சில் தண்டு ஆகியன இல்லாமல்.

CL 1763—பூர்த்தியாக உண்டு.
CL 3251— ,,
CL 3262— ,,
CL 2538— ,,
CN 2133— ,,
CL 9832— ,,
CL 7079— ,,
CL 4703— ,,

பஸ்கள் எல்லாவற்றிற்கும் அல்லது தனிப்பட்ட பஸ்ஸுக்கு கேள்விப்பத்திரம் அனுப்பலாம்.

ஒரு வாகனத்திற்கு ரூ. 50 கட்டுப்பணமாக இருக்கும். இக்கட்டுப் பணம் கொழும்பு 5, கிருல வீதி 200 ம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை பிரதம கணக்காளர் உத்தியோகத்தரிடம் கட்டி, பற்றுச்சீட்டு கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்படவேண்டும். பஸ்களை கொடுத்துத்தீர்க்க தீர்மானம் செய்தபின் இப்பணத்தை மீளப்பெற்றுக் கொள்ளலாம்.

என்வலப்பின் இடது பக்க மேல் மூலையில் "பழைய ஸ்டுடிபேக்கர் பஸ்களுக்கான கேள்விப்பத்திரம்" என்று தெளிவாகக் குறிக்கப்பட்டிருக்கவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் கேள்விப்பத்திரகாரர், கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொண்டதான அறிவித்தல் கிடைத்த 3 நாட்களுக்குள் கேள்விப்பத்திரப் பணமான முழுத்தொகையையும் கட்டி 7 நாட்களுக்குள் பஸ்/பஸ்களை எடுத்துச்செல்லுவதற்குரிய ஒழுங்குகளைச் செய்ய வேண்டும். கொடுப்பனவு செய்தபின் இக்காலத்துக்குள் எடுத்துச் செல்லாவிட்டால் வாகனங்கள் வாங்கினவரின் பொறுப்பைச் சார்ந்திருக்கும்.

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டபின் முறைப்பாடுகள் கவனிக்கப்பட மாட்டாதானபடியால் கேள்விப்பத்திரம் கொடுக்குமுன் கேள்விப்பத்திரகாரர் பஸ்களின் நிலைமையை அறிந்து திருப்தியடைய வேண்டும். கிடைக்கப்பெற்ற எல்லா கேள்விகளை அல்லது ஏதாவதொன்றை ஏற்றுக்கொள்வதா அல்லது நிராகரிப்பதா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை சபைக்குண்டு.

பொரலஸ்கமுவ, வெரஹெரையிலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபை பிரதி பிரதம இஞ்சினியருடன் (தொழில்) ஒழுங்கு செய்து, மேற்கூறப்பட்ட வாகனங்களைப் பார்வையிடலாம்.

செயலாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை.

கொழும்பு,
1960 ம் ஞூ ஜூன் மீ 10 ந் வ.

---

### கட்டுநாயகா ஆகாயவிமானப் படைத் தளத்தில் உள்ள தேங்காய் விற்பனவு

கட்டுநாயகா ஆகாய விமானப் படைத் தளகாணியில் பிடுங்கப்பட்ட தேங்காய்கள் விற்பனைக்கு வேண்டிய கேள்விப் பத்திரங்கள் கொழும்புக் கச்சேரி அரசாங்க அதிபரால் 1960 ஜூன் மாதம் 28 ம் திகதி செவ்வாய்க் கிழமை பகல் 12 மணிவரை கொழும்புக் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப் படும்.

கடைசிப் பிடுங்குதலில் கிட்டத் தட்ட 1,44,000 காய்கள் பிடுங்கப்பட்டன.

கேள்வி அனுப்புபவர் பிடுங்கிய முழுக்காய்களையும் வாங்க வேண்டும். கேள்விப் பத்திரத்தில் 1,000 காய்களுக்கென்ன வீதமென்பது காட்டப்பட வேண்டும்.

2. கொழும்புக் கச்சேரியில் பெற்றுக் கொள்ளும் மாதிரிப்பத்திரங்களில் தான் கேள்விகள் அனுப்ப வேண்டும். ஒப்பந்தக் கேள்விகள் இரு பிரதிகளில் மெழுகச்சிட்டு கேள்விக்காரரின் கையெழுத்திடப்பட்டு அரசாங்க அதிபர் கொழும்புக் கச்சேரி என மேல் விலாசம் இடப்படல் வேண்டும். ஒப்பந்தக் கேள்வி கொண்ட உறைகளில் அவற்றின் இடது பக்கத்தில் கட்டுநாயகா ஆகாய விமானப் படைத்தழத்தில் உள்ள தேங்காய் வாங்குவது பற்றிய ஒப்பந்தக் கேள்வி என எழுதி அனுப்பப் படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள் கடைசித் தேதி காலை 10 மணி வரைக்கும் ரூ. 100 கட்டப்பட்ட பற்றுச்சீட்டைக் காட்டியபின்தான் வழங்கப்படும். கட்டுப் பணம் கொழும்புக் கச்சேரியில் கட்டப்படல் வேண்டும். எவருடைய கேள்விப் பத்திரம் ஏற்கப்பட்டதோ அவரது கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டதென அறிவிக்கும் கடிதம் கிடைத்து பத்து (10) நாட்களுக்குள் முழுத் தொகையையும் கட்டி தேங்காய்களை எடுத்துச் செல்ல வேண்டும். அப்படிச் செய்யத்தவறின் அவருடைய கட்டுப் பணம் பறிமுதல் செய்யப்பட்டு அவரது பெயரைத் தவறுன கேள்விக்காரர் என்னும் இடாப்பில் சேர்க்க வேண்டி வரும் அரசாங்கம் அவரிடம் வைத்துள்ள வேறு எந்தத் தொடர்புக்காவது இரக்கம் காட்ட முடியாது.

4. பதிவு செய்த தபாலில் அரசாங்க அதிபர் கொழும்பு எனும் விலாசத்திற்கு கேள்விப் பத்திரம் அனுப்பல் வேண்டும் அல்லது இதற்கெனக் கொழும்புக் கச்சேரியில் வைக்கப்பட்ட பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விக்காரர் பெயரும் விலாசமும் உறையில் குறிக்கப்படல் வேண்டும்.

5. விரும்பினுல் கேள்விப் பத்திரம் உடைக்கப்படும் நேரத்தில் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படும். கொழும்புக் கச்சேரியில் கேள்விப் பத்திரம் யாவும் 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 28 ம் தேதி பகல் 12 மணிக்குத் திறக்கப்படும்.

6. அதற்கெனக் கொடுக்கப்படும் பாரத்தின்படி இல்லாது அதன்படி சொல்லப்பட்ட நிபந்தனைக் கடங்காத கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ள ப்படமாட்டா. கட்டுப் பணம் கட்டிய றசீற் துண்டு இல்லாத கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படாது. மையினுலேயே தெளிவாக கேள்வியின் விகிதம் தொகை முதலியவற்றை எழுத வேண்டும். திருத்தம் ஏதாகிலும் உண்டாயின் அவற்றை கேள்விக்காரரின் சுருக்குக் கையெழுத்திட்டு உறுதிபண்ணல் வேண்டும்.

7. கேள்விக்காரர் தங்கள் முழு விலாசத்தையும் மாதிரிப் பத்திரத்தில் கொட்டை எழுத்துக்களில் எழுத வேண்டும்.

8. கேள்விக்காரர் ரெண்டர் பத்திரம் யாவும் மூடப்படும் தேதியில் இருந்து 3 கிழமை வரைக்கும் தங்கள் கேள்விகளை அனுமதிக்கப்படும்வரை காத்திருக்க வேண்டும்.

9. கொழும்பு அரசாங்க அதிபர் எந்தக் கேள்விப் பத்திரத்தையும் மறுக்கவோ அல்லது எதிலும் ஓர் பகுதியை ஏற்கவோ உரிமையுடையவராவர்.

10. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் தன் வேலைகளைச் செய்விப்பதற்கு இலங்கைத் தொழிலாளரை மாத்திரம் உபயோகிக்க வேண்டும். இலங்கையாளர் என்பதை இலங்கை பிரஜையானவர் அல்லது பதிவு செய்யப்பட்ட பிரஜை எனவே கருதல் வேண்டும்.

11. கேள்விக்காரருக்கு விடப்படும் நோட்டீஸ் யாவும் அவருக்கு நேரிலேயே வழங்கப்பட்டோ அல்லது அவரால் கொடுக்கப்பட்ட விலாசத்திற்கே தபால் மூலம் அனுப்பப்பட்டு இருந்தால் அவருக்கு அவற்றை வழங்கியதாகவே கருதல் வேண்டும்.

12. கேள்விப் பத்திரகாரர் தன் கீழ் உள்ள சிப்பந்தியாருக்காகவென்றுலும் அவர் கோரும் நட்டம் எதையும் 1934 ம் ஆண்டின் 19 ம் இலக்க தொழிலாளர் நட்ட ஈட்டு ஆஞ்ஞைப்படி அத்தியாயம் 117 ம் நட்டம் கட்ட வேண்டும்.

13. அரசாங்கத்திற்கு திருப்தியில்லாத எந்த வேலையாளையோ அல்லது வேலையாட்களையோ வைத்து வேலை செய்விக்க தடுப்புக் கூறுவதற்கு அரசாங்கம் உரிமை உடையது.

14. அரசாங்கத்தினரால் தவறுன கேள்வி ஒப்பந்தக்காரர் என்னும் இடாப்பில் சேர்க்கப் பட்டவரேனும் அல்லது போதிய காரணங்களால் ஒப்பந்தம் பண்ண படாதென அரசாங்க அதிபருக்குத் தோற்றுபவரோடும் ஒப்பந்தம் எழுதப்படமாட்டாது.

15. தேங்காய்களை தெரிந்து எடுக்காது காசை கட்டி அப்புறப்படுத்தல் வேண்டும்.

16. மற்றும் மேற்படி தகவல்களை கொழும்புக் கச்சேரி அரசாங்க அதிபர் அல்லது பிரிவுக் காரியாதிகாரி நீர்கொழும்பு என்போருக்கு மனுச்செய்து பெற்றுக்கொள்ளவும்.

ஜீ. பி. தம்மையா,
அரசாங்க அதிபர்,
கொழும்பு மாவட்டம்.

கொழும்புக் கச்சேரி,
1960 ம் ஞூ ஆனி 14 ம் தேதி.

---

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.